www.surabooks.com

சுராவின்

# சமூக அறிவியல்

## 9 ஆம் வகுப்பு

**புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின் படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

**சிறப்பம்சங்கள்**

- பாட நூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் முழுமையான, எளிமையான விடைகள் தரப்பட்டுள்ளன.
- கூடுதலான வினா விடைகள் தரப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அலகுத் தேர்வு வினாத்தாள் தரப்பட்டுள்ளன.
- காலாண்டுத் தேர்வு 2019, 2023 & 2024 ***[QY-'19, '23 & '24]***, அரையாண்டுத் தேர்வு - 2019, 2023 & 2024 ***[HY-'19, '23 & '24]*** மற்றும் ஆண்டுப் பொதுத் தேர்வு ஏப்ரல் 2023, 2024 & 2025 ***[April-'23, '24 & '25]*** வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- ஆண்டுப் பொதுத்தேர்வு ஏப்ரல் - 2025 வினாத்தாள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

**For Orders Contact**

**80562 94222 / 81242 01000 / 81243 01000**
**96001 75757 / 98409 26027**

enquiry@surabooks.com    Ph: 8124201000 / 8124301000

புதிய பதிப்பு

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

குறியீட்டு எண். FY-9-SS-TM

**எழுதி வழங்கியவர்**

**திரு. ம. பெருமாள்,** M.A., M.Ed., கோவை
**திரு. செ. இந்திரன்,** M.A., B,Ed., தர்மபுரி
**திருமதி. வ. வெண்மதி,** M.A., M.Ed., சென்னை

**திருத்தியவர்**

**திரு. மா. மகாலிங்கன்,** M.A., B.Ed., சென்னை

**மதிப்பாளர்**

**முனைவர். த. வெங்கடேசன்** M.A., M.Phil., Ph.D.,
துறைத்தலைவர், தர்மபுரி

**Also available for Std - X**

Guides :
- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**Also available for Std - XI, XII**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

12/05/2025

# பதிப்பாசிரியர் உரை

9-ஆம் வகுப்பிற்கான **சூராவின் சமூக அறிவியல் வழிகாட்டியை** வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய பாடத்திட்டத்தின்படி, பாடங்களை தெளிவாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்வதற்கு தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி நமது வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு கற்பிக்க உறுதுணையாகவும், மாணவர்களுக்கு கற்க உறுதுணையாகவும் இந்த வழிகாட்டி இருக்கும் வகையில் வினாக்களுக்கான விடைகள் விளக்கமாகவும், எளிமையாகவும் தரப்பட்டுள்ளன.

பாடப்புத்தகத்தின் அனைத்து பாடங்களையும் திறமையுடன் கற்றுக் கொள்வதற்கு உதவும் வகையில் விரிவான கூடுதல் வினா விடைகள் அனைத்து பிரிவின் கீழும் தரப்பட்டுள்ளன.

நமது வழிகாட்டி பல சிறப்பம்சங்களை கொண்டிருப்பினும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதின் பாங்கினை குறைத்து மதிப்பிட முடியாது. அது நிறைந்த மதிப்புடையது.

மாணவச் செல்வங்களின் தேவைகளை நிறைவு செய்யவும், ஆசிரியப் பெருந்தகையினரின் கற்பிக்கும் பாங்கினை மேம்படுத்தவும் இந்த வழிகாட்டி பெரிதும் உதவும் என்று உறுதியுடன் நம்புகிறோம்.

மாணவமணிகள் தேர்வில் முழு வெற்றி பெற இறைவருளை வேண்டுகிறோம்.

- **சுபாஷ் ராஜ்,** B.E., M.S.
பதிப்பகத்தார்
சுரா பதிப்பகம்

***வாழ்த்துக்கள் !!!***



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **36550290536** | Our A/c No. : **21000210001240** |
| Bank Name : **STATE BANK OF INDIA** | Bank Name : **UCO BANK** |
| Bank Branch : Padi | Bank Branch : Anna Nagar West |
| IFSC : SBIN0005083 | IFSC : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **6502699356** | Our A/c No. : **1154135000017684** |
| Bank Name : **INDIAN BANK** | Bank Name : **KVB BANK** |
| Bank Branch : Asiad Colony | Bank Branch : Anna Nagar |
| IFSC : IDIB000A098 | IFSC : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **13240200032412** | Our A/c No. : **50200031530945** |
| Bank Name : **FEDERAL BANK** | Bank Name : **HDFC BANK** |
| Bank Branch : Anna Nagar | Bank Branch : Cenotaph Road, Teynampet |
| IFSC : FDRL0001324 | IFSC : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

# பொருளடக்கம்

## வரலாறு


1. மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம்............ 1 - 10
2. பண்டைய நாகரிகங்கள் ........................................11 - 19
3. தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும் ........................20 - 28
4. அறிவு மலர்ச்சியும், சமூக-அரசியல் மாற்றங்களும் ....................29 - 37
5. செவ்வியல் உலகம் ........................................38 - 46
6. இடைக்காலம் ........................................47 - 53
7. இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் ........................54 - 62
8. நவீன யுகத்தின் தொடக்கம் ........................................63 - 72
9. புரட்சிகளின் காலம் ........................................73 - 84
10. தொழிற்புரட்சி ........................................85 - 95
11. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்........................96 - 108


## புவியியல்


1. நிலக்கோளம் - I புவி அகச்செயல்பாடுகள் ........................109 - 120
2. நிலக்கோளம் - II புவி புறச்செயல்பாடுகள் ........................121 - 132
3. வளிமண்டலம் ........................................133 - 145
4. நீர்க்கோளம் ........................................146 - 156
5. உயிர்க்கோளம் ........................................157 - 166
6. மனிதனும் சுற்றுச் சூழலும் ........................................167 - 175
7. நிலவரைபடத் திறன்கள் ........................................176 - 185
8. பேரிடர் மேலாண்மை - பேரிடரை எதிர்கொள்ளுதல் ........................186 - 190


## குடிமையியல்


1. அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி ........................191 - 200
2. தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்........................201 - 208
3. மனித உரிமைகள் ........................................209 - 218
4. அரசாங்கங்களின் வகைகள் ........................................219 - 224
5. உள்ளாட்சி அமைப்புகள் ........................................225 - 231
6. சாலைப் பாதுகாப்பு ........................................232 - 236


## பொருளியல்


1. மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை..........237 - 245
2. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு ........................246 - 254
3. பணம் மற்றும் கடன் ........................................255 - 261
4. தமிழ்நாட்டில் வேளாண்மை ........................................262 - 267
5. இடம்பெயர்தல் ........................................268 - 274

ஆண்டுப் பொதுத்தேர்வு - ஏப்ரல் 2025 வினாத்தாள் விடைகளுடன் ................275 - 282






www.surabooks.com

# பாடத்திட்டம்

| மாதம் | வரலாறு | புவியியல் | குடிமையியல் | பொருளியல் | மொத்த அலகுகள் |
|---|---|---|---|---|---|
| ஜுன் | 1 | 1 | 1 | 1 | 4 |
| ஜுலை | 2,3 | 2, 3 | 2 | 2 | 6 |
| முதல் இடைத் தேர்வு (ஜுன் & ஜுலை - 10 அலகுகள்) | | | | | |
| ஆகஸ்ட் | 4, 5 | 4, 5 | 3 | 0 | 5 |
| செப்டம்பர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| காலாண்டுத் தேர்வு (ஜுன் - செப்டம்பர் - 15 அலகுகள்) | | | | | |
| அக்டோபர் | 6, 7 | 6 | 4 | 3 | 5 |
| நவம்பர் | 8 | 7 | 5 | 4 | 4 |
| இரண்டாம் இடைத் தேர்வு (அக்டோபர் & நவம்பர் - 9 அலகுகள்) | | | | | |
| டிசம்பர் | 9 | 0 | 0 | 0 | 1 |
| அரையாண்டுத் தேர்வு (ஜுன் - டிசம்பர்) | | | | | |
| ஜனவரி | 10 | 8 | 6 | 5 | 4 |
| பிப்ரவரி | 11 | 0 | 0 | 0 | 1 |
| மார்ச் | மூன்றாம் இடைத் தேர்வு (ஜனவரி & பிப்ரவரி - 5 அலகுகள்) | | | | |
| ஏப்ரல் | முழு ஆண்டுத் தேர்வு (மொத்த அலகுகள்) | | | | |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

## வரலாறு

## அலகு 1

# மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. **மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது ※※※** [QY-'23 & '24; April-'23]

அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி
இ) உராங்குட்டான் ஈ) பெருங்குரங்கு

**விடை: ஆ) சிம்பன்ஸி**

2. **வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்** ※ [HY-'23]

அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்

**விடை: இ) புதிய கற்காலம்**

3. **பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ............ ஆவர்.** [QY-'23; April-'24 & '25]

அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்

**விடை: இ) ஹோமோ சேபியன்ஸ்**

4. **எகிப்து, இஸ்ரேல்–பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி ............... எனப்படுகிறது.**

அ) கிரேட் ரி∴ப்ட் பள்ளத்தாக்கு ஆ) பிறைநிலப் பகுதி
இ) ஸோலோ ஆறு ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு

**விடை: ஆ) பிறைநிலப் பகுதி**

5. **சர் இராபர்ட் புரூஸ் ∴பூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் .................. கருவிகளை முதன்முறையாக கண்டுபிடித்தார்.**

அ) நுண்கற்காலம் ஆ) பழங்கற்காலம்
இ) இடைக் கற்காலம் ஈ) புதிய கற்காலம்

**விடை: ஆ) பழங்கற்காலம்**

6. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

i) **எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.**
ii) **வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**iii) வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.**

**iv) வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.**

அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி

இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (ii) மற்றும் (iii) சரி

**விடை: இ) (i) மற்றும் (iv) சரி**

7. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**i) செல்ட் எனப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.**

**ii) புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.**

**iii) புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் பழங்கற் காலம் எனப்படுகிறது.**

**iv) விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iv) சரி

**விடை: அ) (i) சரி**

8. **கூற்று : தமிழ்நாட்டின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக் கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**

**காரணம் : நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது**

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை. **விடை: ஈ) கூற்றும் காரணமும் தவறானவை**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கை கோடரிகளும் வெட்டுக் கருவிகளும் .................... பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும். ※ [HY-'24] **விடை: கீழ்ப் பழங்கற்காலப்**

2. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும் ...................... தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன. **விடை: கற்கருவி**

3. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் .................. எனப்படும். **விடை: இடைக் கற்காலம்**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. **அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள 'தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்' என்ற கருத்து உதவுகிறது.**

**ஆ) 'உயிர்களின் தோற்றம்' என்ற நூலை ஹெர்பர்ட் ஸ்பென்சர் பதிப்பித்தார்.**



www.surabooks.com

இ) உயிரியல் பரிணாம வளர்ச்சி குறித்த சார்லஸ் டார்வின் கோட்பாடு, இயற்கைத்தேர்வு என்ற வழிமுறையுடன் தொடர்பு உடையது.

ஈ) கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது நிலவியல் ஆகும்.

**விடை: அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள 'தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்' என்ற கருத்து உதவுகிறது.**

2. அ) குரங்கினங்களில் உராங்குட்டான் மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.

ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம். அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

இ) செதிலை கருவிகள் செய்ய பயன்படுத்த முடியாது.

ஈ) சிறு செதில்கள் தயாரிக்கப் பயன்படும் மூலக்கல் அச்சூலியன் எனப்படும்.

**விடை: ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம். அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.**

## IV. பொருத்துக.

※ [QY-'19]

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | பழங்கால மானுடவியல் | - | தேரி | **மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு** |
| 2. | கோடரிக்கருவிகள் | - | வீனஸ் | **அச்சூலியன்** |
| 3. | கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | - | அச்சூலியன் | **வீனஸ்** |
| 4. | செம்மணல் மேடுகள் | - | நுண்கற்காலம் | **தேரி** |
| 5. | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | - | மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு | **நுண்கற்காலம்** |

## V. சுருக்கமான விடை தருக.

1. **ஊகக் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?**

விடை: (i) உலகம் மற்றும் பேரண்டம் குறித்து **புரிந்துகொள்ளவும்**, அவை குறித்த அறிவைச் **சேகரித்து விளக்கவும்** முயற்சி செய்வது மானுட இனம் மட்டுமே.

(ii) பரிணாம வளர்ச்சியால் மனிதர்கள் **உணர்தல் நிலையையும் அறிவாற்றலையும்** பெற்றனர்.

(iii) அவர்கள் இயற்கை, தம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் மற்றும் உலகம் குறித்துச் **சிந்திக்கவும், கேள்வி எழுப்பவும்** தொடங்கினர்.

2. **வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.**

விடை: (i) இரும்புக்கால மக்கள் **வேளாண்மையும், ஆடு, மாடு வளர்ப்பையும்** மேற்கொண்டனர்.

(ii) **தினையும் நெல்லும்** பயிரிடப்பட்டன.

(iii) பாசன நிர்வாகம் மேம்பட்டது. ஆற்றுப்படுகைகளில் (டெல்டா பகுதி) பாசன தொழில் நுட்பம் வளர்ந்தது.

**3. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.** ※ ※ [QY-'23 & '24]

**விடை:** (i) டோல்மென் எனப்படும் கற்திட்டை
(ii) சிஸ்ட் எனப்படும் கல்லறைகள்
(iii) மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக்கல்
(iv) தாழி
(v) பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள்
(vi) சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள்

**4. கருவி செய்வதில் கீழ்ப் பழங்கற்கால மக்களிடமிருந்த தொழில்நுட்பத்தைத் திறனாய்வு செய்க.** ※ ※ [HY-'23 & '24]

**விடை:** (i) பெரிய கற்களைச் செதில்களாகச் சீவி கைக்கோடரி, வெட்டுக்கருவி போன்றவற்றை செய்தனர்.
(ii) இந்தக் கருவிகள் **இருமுகக் கருவிகள்** என்று அழைக்கப்படுகின்றன. அவை சமபங்கு உருவ அமைப்பைப் பெற்றுள்ளன.
(iii) கைக்கோடரிக் கருவிகள் அச்சூலியன் கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் – உறுதிப்படுத்தவும்.**

**விடை: அ) விவசாயம் :**
(i) இரும்புக்காலத்தில் விவசாயமே முக்கிய தொழிலாக இருந்தது. **நெல், திணை** பயிரிடப்பட்டது. **ஆடு, மாடுகளை** வளர்த்தனர்.
(ii) நதிகள், குளங்களுக்கு அருகே வாழ்ந்ததால் விவசாயம் செழிப்புற்றது.
(iii) ஆற்றுப்படுகைகளில், **பாசன தொழில்நுட்பம்** வளர்ந்தது.

**ஆ) பானை செய்தல் :**
(i) அக்காலத்தில் மக்கள் கருப்பு, சிவப்பு நிற **மட்பாண்டங்களை** பயன்படுத்தினர். அவை உள் பகுதியில் கருப்பாகவும் வெளிப்பகுதியில் சிவப்பாகவும் இருந்தது.
(ii) மட்பாண்டங்கள் சமையலுக்கு, பொருள் சேகரிப்பதற்கு மற்றும் சாப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

**இ) உலோகக் கருவிகள் :**
(i) இரும்பு கருவிகள் வேளாண்மைக்கும், வேட்டையாடுதலுக்கும், உணவு சேகரிப்பதற்கும், போர் புரியவும் பயன்படுத்தப்பட்டன.
(ii) வாள், குறுவாள், கோடரிகள், உளிகள், விளக்குகள், முக்காலிகள் ஆகியவை கிடைத்துள்ளது.
(iii) வெண்கலக் கிண்ணம், கலங்கள், முகம்பார்க்கும் கண்ணாடி, மணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளது.

மேற்கண்ட அனைத்தும் பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும்.



www.surabooks.com

**2. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது – தெளிவுப்படுத்துக.** ※※※※※ [HY-'19 & '24; QY-'23 & '24; April-'24 & '25]

விடை: (i) மனிதர்களின் வரலாற்றைப் புவியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.

(ii) புவி சுமார் 4.54 **பில்லியன்** ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது. காலப்போக்கில் உயிர்கள் தோன்றுவதற்கான நிலை படிப்படியாக உருவானது.

(iii) தாவரங்கள், விலங்குகள் தோன்றிய பிறகு மனித உயிர்கள் தோன்றியது.

(iv) புவியின் நீண்ட நெடிய வரலாற்றை நிலவியல் ஆய்வாளர்கள் காலம், நெடுங்காலம், ஊழி என்று பிரிக்கிறார்கள்.

(v) புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் கால கட்டங்கள் குறித்த **நிலவியல், தொல்லியல், உயிரியல்** பதிவும் பொதிந்து கிடக்கின்றன.

(vi) இந்த மேலடுக்குகளில் மனித மூதாதையரின் **எலும்புகளின் புதைபடிவங்களும்** புதைந்துள்ளன.

(vii) தொல்லியல் அறிஞர்கள் புவியின் **மண்** மற்றும் **பாறை** அடுக்குகளை **அகழ்ந்து** மனித மூதாதையர் குறித்த சான்றுகளைச் சேகரித்துள்ளனர்.

(viii) இச்சான்றுகள் மூலம் மனித வரலாற்றின் பரிணாம வளர்ச்சி நிலைகள் மற்றும் அவற்றின் காலத்தை அறிந்து கொள்ளமுடியும்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்** ※ [QY-'19]

**i) ஹோமினிட் என்போர் யாவர்?**

**ii) ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?**

**iii) நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?**

**iv) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறுக.**

விடை: (i) நவீன மற்றும் அழிந்து போன அனைத்து பெருங்குரங்கு இனங்களும் ஹோமினிட் எனப்படும்.

(ii) ஹோமோ ஹெபிலிஸ் (iii) ஹோமோ சேப்பியன்ஸ் (iv) ஹோமோ ஏரக்டஸ்.

## கூடுதல் வினாக்கள்

### I. ஒரு மதிப்பெண் வினாக்கள்.

1. நாம் ................ தொழில்நுட்ப காலத்தில் வாழ்கிறோம். **விடை: தகவல்**

2. மனிதர்களின் வரலாற்றை ................ வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது. **விடை: புவியின்**

3. தொல்பொருள்களை ஆராய்ந்து, விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயும் இயல் ................ ஆகும். **விடை: தொல்லியல்**

4. மனித மூதாதையர்களின் உடலமைப்பு மற்றும் அவர்களது பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளும் இயல் ............ . **விடை: தொல் மானுடவியல்**

5. ................ காலகட்டத்தில் டைனோஸர்கள் வாழ்ந்தன. **விடை: இடைத் தொல்லுயிரூழி**



www.surabooks.com

6. வரலாறு எழுதுவது பண்டைய ................ காலத்தில் தொடங்கியது என்று சொல்லலாம். **விடை: கிரேக்கர்கள்**

7. வரலாற்றின் தந்தை ................ ஆவார். **விடை: ஹெரோடோடஸ்**

8. என்னிகால்டி - நன்னா அருங்காட்சியகம் ................ வில் அமைக்கப்பட்டது. **விடை: மெசபடோமியா**

9. உலகின் மிகப்பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம் உள்ள இடம் ................ . **விடை: ஆக்ஸ்போர்ட்**

10. புதைப்படிவுகள் குறித்த ஆய்வு ................ என்று அழைக்கப்படுகிறது. **விடை: புதைபடிவ ஆய்வியல்**

11. ................ தோற்றம் மனித வரலாற்றின் மிக முக்கியமான திருப்புமுனையாகும். **விடை: எழுத்துத்துறையின்**

12. கூரிய வெட்டுமுனை உள்ள கல்லால் ஆன உளிக்கு ................ என்று பெயர். **விடை: பியூரின்**

13. குரோ-மக்னான் என்றழைக்கப்படும் மனிதர்கள் ................ வில் வாழ்ந்தார்கள். **விடை: ஐரோப்பா**

14. கீழ்ப் பழங்கற்காலப் பண்பாட்டின் கற்கருவிகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இடங்களில் ................ ஒரு இடம். **விடை: அதிரம்பாக்கம்**

15. மனிதர்களின் சிந்தனை வளர்ச்சியுடன் தொடர்புடையது ................ . **விடை: அறிவாற்றல்**

16. கோதுமை, பார்லி, பட்டாணி ஆகியவை ................ ஆண்டுகளுக்கும் முன்பே பயிரிடத் தொடங்கப்பட்டுவிட்டன. **விடை: 10,000**

17. உலகில் மனித மூதாதையர்கள் வசித்த மிக முக்கியமான இடங்களில் ஒன்று ................ . **விடை: கொசஸ்தலையாறு**

18. விவசாயம் மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம் ................ . **விடை: புதிய கற்காலம்**

19. தமிழகத்துக்கு அப்பால் சேர, சோழ, பாண்டியர்கள் குறித்து அறிந்துகொள்ள பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த ................ கல்வெட்டுக் குறிப்புகள் உதவுகின்றன. **விடை: அசோகர்**

20. மனிதர்கள் உருவாக்கிய அல்லது மாற்றியமைத்த ஒரு பொருள் அல்லது கருவி ................ எனப்படுகிறது. **விடை: செய்பொருள்**

21. தொடக்க நிலை பல செல் உயிரினம் முதல் முதலில் ................ காலத்தில் தோன்றியது. **விடை: தொல்லுயிரூழி**

22. ................ என்ற குரங்கினத்திலிருந்துதான் நவீன மனித இனம் தோன்றியது. **விடை: ஆஸ்ரோலோபித்திசின்கள்**

23. இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ................ அருங்காட்சியகமே உலகின் மிகப் பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம். **விடை: ஆஷ்மோலியன்**

24. சி.ஜே. தாம்சன் முன்மொழிந்த ................ என்ற கருத்து பண்டைய மனிதகுல வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு உதவும் முக்கியமான கருத்தாகும். **விடை: மூன்று காலகட்ட முறை**

25. எழுத்துமுறை அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ................ என்று குறிப்பிடப்படுகிறது. **விடை: தொல்பழங்காலம்**

26. ஓல்டோவான் கருவிகள் ஆப்பிரிக்காவின் ................ மலையிடுக்கில் கிடைத்துள்ளன. **விடை: ஓல்டுவாய்**

27. கைக்கோடரிக் கருவிகள் ................ கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. **விடை: அச்சூலியன்**

28. ................ என்பது ஒரு கல்லின் முதன்மைப் பாளம் ஆகும். **விடை: கருக்கல்**

29. நாகரிகத்தில் நிலத்தை உழுவதற்கு ................ பயன்படுத்தப்பட்டன. **விடை: காளைகள்**

30. தூத்துக்குடி அருகே உள்ள ................ பகுதிகளில் இடைக்கற்கால கற்கருவிகள் பல கிடைத்துள்ளன. **விடை: தேரி**

## II. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. i) வரலாறு எழுதுவது பண்டைய எகிப்தியர் காலத்தில் தொடங்கியது.
ii) ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அமெரிக்காவில் இருக்கிறது.
iii) 1 மில்லியன் என்பது 10 லட்சம்.
iv) அச்சூலியன் கருவிகள் சென்னைக்கு அருகில் கிடைத்துள்ளன.
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (iii) மற்றும் (iv) சரி
ஈ) (i) மற்றும் (iii) சரி

**விடை: இ) (iii), மற்றும் (iv) சரி**

2. கூற்று : கல்லறை, கற்திட்டைகளில் போர்ட் ஹோல் எனப்படும் இடுதுளை ஒன்று ஒரு புறம் இடப்பட்டிருக்கும்.
காரணம் : இறந்தவரின் ஆன்மா இந்த துளையின் வழியே வந்து செல்வதற்காக இப்படி அமைக்கப்பட்டது.
அ) கூற்று சரி; காரணம் தவறு
ஆ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
இ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.**

3. கூற்று : பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகர் கல்வெட்டுக் குறிப்புகள் அவரது பேரரசுக்கு வெளியே இருந்த சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.
காரணம் : தமிழகத்தைச் சேர்ந்த பழங்கால அரசர்கள் அரசியல் நோக்கில் அவர்களின் ஆட்சியை இரும்புக்காலத்தில் துவக்கினார்கள்.
அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி; காரணம் தவறு. ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**விடை: அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது**

4. அ) தமிழ்நாட்டில் மேல் பழங் கற்காலப் பண்பாட்டுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை.
ஆ) இறந்தவர்களின் உடலோடு ஈமப் பொருட்களாக பொன் ஆபரணங்களும் பெருங் கற்கால காலகட்டத்தில் புதைக்கப்பட்டன.
இ) இரும்புக் காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம், புதிய கற்காலம் என்றழைக்கப்படுகிறது.
ஈ) செல்ட் (celt) என்பது மெருகேற்றப்பட்ட மட்பாண்டமாகும்.

**விடை: அ) தமிழ்நாட்டில் மேல் பழங் கற்காலப் பண்பாட்டுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை.**

5. அ) சார்க்கோபேகஸ் என்பவை சுட்ட களிமண்ணாலான சவப்பெட்டி போன்றவை.
ஆ) அர்ன் என்பவை புதைத்ததன் நினைவுச்சின்னம் போல நிறுவப்படும் தூண் போன்ற நடுகற்கள்.
இ) புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சானூர் என்ற இடத்தில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
ஈ) பொ.ஆ.மு. 5,000–க்கு முன் இலங்கையின் சில பகுதிகளும், தமிழ்நாடும் நிலத்தில் இணைக்கப்பட்டிருந்தன.

**விடை: அ) மற்றும் ஈ) சரி**

www.surabooks.com



## III. பொருத்துக.

1.

| | | | |
|---|---|---|---|
| 1. | தொல்லுயிரூழி | அ) | 251 முதல் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 2. | பழந் தொல்லுயிரூழி | ஆ) | 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் |
| 3. | இடைத் தொல்லுயிரூழி | இ) | 542 முதல் 251 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 4. | பாலூட்டிகள் காலம் | ஈ) | சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 5. | நுண்ணுயிரிகளின் வடிவில் உயிர்கள் | உ) | சுமார் 600 முதல் 542 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |

**விடை: 1 - உ, 2 - இ, 3 - அ, 4 - ஈ, 5 - ஆ**

2.

| | | | |
|---|---|---|---|
| 1. | என்னிகால்டி - நன்னா அருங்காட்சியகம் | அ) | பொ.ஆ.1471 |
| 2. | கேபிடோலைன் அருங்காட்சியகம் | ஆ) | பொ.ஆ.1820 - 1903 |
| 3. | ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் | இ) | பொ.ஆ.1809 - 1882 |
| 4. | ஹெர்பர்ட் ஸ்பென்சார் அருங்காட்சியகம் | ஈ) | பொ.ஆ. மு. 530 |
| 5. | சார்லஸ் டார்வின் அருங்காட்சியகம் | உ) | பொ.ஆ.1677 |

**விடை: 1 - ஈ, 2 - அ, 3 - உ, 4 - ஆ, 5 - இ**

## IV. சுருக்கமான விடை தருக.

**1. நியாண்டர்தால்களின் தனித்தன்மை வாய்ந்த பண்புகளைக் கூறு.**

**விடை: நியாண்டர்தால்களின் பண்புகள் :**

(i) நியாண்டர்தால் இனம் நிமிர்ந்து **இரண்டு கால்களால் நடப்பதாகும்.**

(ii) இந்த இனத்திற்கு **பெரிய மூளை** உண்டு.

(iii) இவை கருவிகளைப் பயன்படுத்தும், இவற்றில் சில ஆஸ்ட்ரலோபித்திசைன்கள் தகவல் பரிமாறும் திறன் பெற்றவை.

**2. புவியின் மேலடுக்குகளின் முக்கியத்துவம் குறித்து விவரி.**

விடை: (i) புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் பொதிந்துகிடக்கின்றன.

(ii) புவி மற்றும் பல்வேறு உயிரினங்களின் வரலாற்றை அறிவதற்கு இச்சான்றுகள் மிக முக்கியமானவையாகும்.

(iii) இவ்வடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகளின் புதைபடிவங்களாகப் புதைந்துள்ளன.

(iv) மனிதர்களின் பரிணாமம், தொல்பழங்காலம் ஆகியவற்றின் பல்வேறு கால கட்டடங்களை அறிய இந்தப் புதைபடிவங்கள் மற்றும் மண்ணடுக்குகளின் காலம் அறிவியல்பூர்வமாகக் கணிக்கப்படுகிறது.

**3. மனித மூதாதையரின் தொடக்க காலக் கற்கருவிகளை நாம் எங்கு காணலாம்?**

விடை: (i) மனித மூதாதையர்களால் உருவாக்கப்பட்ட தொடக்ககாலக் கற்கருவிகள் **கென்யாவின் லோமிக்குவி** என்ற இடத்தில் கிடைத்துள்ளன.

(ii) ஓல்டோவான் கருவிகள் ஆப்பிரிக்காவின் ஓல்டுவாய் பள்ளத்தாக்கில் கிடைத்துள்ளன.

(iii) மனித மூதாதையர்கள் (ஆஸ்ட்ரோலோபித்திசின்கள்) சுத்தியல் கற்களை பயன்படுத்தினர்.

(iv) மேலும் "**பிளேக்ஸ்**" (flakes) எனப்படும் கற்செதில்களை உருவாக்கிக் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள்.

**4. தொல்லியல் அகழாய்வு என்றால் என்ன?**

**விடை:** மண்ணில் புதைந்துள்ள கற்கருவிகள், பானைகள், விலங்குகளின் எலும்புகள், மகரந்தங்கள் ஆகியவற்றை அகழ்ந்தெடுத்து மனிதர்களின் கடந்த கால வாழ்க்கைமுறையைப் புரிந்து கொள்வது 'தொல்லியல் அகழாய்வு' ஆகும்.

**5. தமிழ்நாட்டில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ள இடங்கள் யாவை?**

**விடை:** தூத்துக்குடி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூர், மதுராந்தகத்திற்கு அருகிலுள்ள சானூர், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் எனப் பல இடங்களில் இரும்புக் காலத்திற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

**6. மைக்ரோலித் என்றால் என்ன?**

**விடை:** நுண்கற்கருவிகள் மிகச்சிறிய கற்களால் உருவாக்கப்பட்ட செய்பொருட்கள் ஆகும்.

## V. விரிவான விடையளிக்கவும்.

**1. பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகளை விளக்குக.**

**விடை:** (i) மக்கள் **இறந்தவர்களைப் புதைப்பதற்கு பெரிய கற்களைப்** பயன்படுத்தியதால், இரும்புக் காலம், பெருங்கற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

(ii) இறந்தவர்களின் உடலோடு ஈமப்பொருட்களாக, **இரும்புப் பொருட்கள், கார்னீலியன் மணிகள், வெண்கலப் பொருட்கள்** ஆகியவையும் புதைக்கப்பட்டன.

(iii) ஈமப்பொருட்கள் என்பவை இறந்தவரின் எலும்புகளோடு ஈமச்சின்னத்தில் புதைக்கப்படும் பொருட்கள், மரணத்திற்குப் பிறகான இறந்தவரின் வாழ்விற்கு அவை உதவக்கூடும் என்று மக்கள் நம்பியிருக்கலாம்.

(iv) பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் **டோல்மென்** எனப்படும் கற்திட்டை, சிஸ்ட் எனப்படும் கல்லறைகள், மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக் கல், தாழி, பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள், சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

(v) கொடக்கல் அல்லது குடைக்கல் (குடை வகை), தொப்பிக்கல், பத்திக்கல் ஆகிய வகைகள் கேரளாவில் காணப்படுகின்றன. மேஜை போன்ற கல்லால் உருவாக்கப்பட்ட டோல்மென்கள் ஈமச் சடங்கின் நினைவுச்சின்னமாக நிறுவப்பட்டன.

(vi) **சிஸ்ட்** என்பது மண்ணில் புதைக்கப்படும் **கல்லறை** போன்றது. இவை நான்கு புறமும் நான்கு கற்பாளங்களை நிறுத்தி, மேலே ஒரு கற்பாளத்தை வைத்து மூடி உருவாக்கப்படும்.

(vii) அர்ன் என்பவை மட்பாண்ட சாடிகள். இவை இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்டவை. சார்க்கோபேகஸ் என்பவை சுட்ட களிமண்ணாலான சவப்பெட்டி போன்றவை. மென்ஹிர் என்பவை புதைத்ததன் நினைவுச் சின்னம் போல நிறுவப்படும் தூண் போன்ற நடுகற்கள்.

(viii) கல்லறை, கற்திட்டைகளில் **'போர்ட் ஹோல்'** எனப்படும் இடு துளை ஒன்று ஒருபுறம் இடப்பட்டிருக்கும்.

(ix) இது அவற்றின் நுழைவாயில் போலப் பயன்பட்டன. இவை ஆன்மா வந்து செல்வதற்காக வைக்கப்பட்டவை என்ற கருத்தும் உள்ளது.

✶ ✶ ✶


www.surabooks.com

# அலகுத் தேர்வு

காலம் : 40 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** (4 × 1 = 4)

1. **மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது**
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) கிரேட் ஏப்ஸ்

2. **தமிழகத்துக்கு அப்பால் சேர, சோழ, பாண்டியர்கள் குறித்து அறிந்துகொள்ள பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த ............ கல்வெட்டுக் குறிப்புகள் உதவுகின்றன.**
அ) புலிகேசி ஆ) அசோகர் இ) சந்திரகுப்தர் ஈ) தனநந்தர்

3. i) **செல்ட் எனப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.**
ii) **புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.**
iii) **புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் பழங்கற் காலம் எனப்படுகிறது.**
iv) **விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.**
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iv) சரி

4. **வரலாற்றின் தந்தை ...................... ஆவார்.**
அ) ஹெரோடோடஸ் ஆ) ஹெர்குலிஸ்
இ) அரிஸ்டாடில் ஈ) சாக்ரடீஸ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (4 × 1 = 4)

1. மனிதர்கள் உருவாக்கிய அல்லது மாற்றியமைத்த ஒரு பொருள் அல்லது கருவி .............. எனப்படுகிறது
2. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் .................. எனப்படும்.
3. கைக்கோடரிக் கருவிகள் ....................... கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.
4. .................... என்பது ஒரு கல்லின் முதன்மைப் பாளம் ஆகும்.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | கோடரிக்கருவிகள் | அ) | சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு |
| 2. | செம்மணல் மேடுகள் | ஆ) | பொ.ஆ.மு. 530 |
| 3. | பாலூட்டிகளின் காலம் | இ) | தேரி |
| 4. | என்னிகால்டி - நன்னா அருங்காட்சியகம் | ஈ) | அச்சூலியன் |

**IV. சுருக்கமாக விடையளி.** (4 × 2 = 8)

1. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.
2. தொல்லியல் அகழாய்வு என்றால் என்ன?
3. மைக்ரோலித் என்றால் என்ன?
4. கருவி செய்வதில் கீழ்ப்பழங் கற்கால மக்களிடமிருந்த தொழில்நுட்பத்தைத் திறனாய்வு செய்க.

**V. விரிவான விடையளி,** (1 × 5 = 5)

1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் - உறுதிப்படுத்தவும்.

✶ ✶ ✶



www.surabooks.com

அலகு 2

# பண்டைய நாகரிகங்கள்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. **சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை ..................... என்கிறோம்.**
அ) அழகெழுத்து ஆ) சித்திர எழுத்து இ) கருத்து எழுத்து ஈ) மண்ணடுக்காய்வு
**விடை: ஆ) சித்திர எழுத்து**

2. **எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை ..................... .**
அ) சர்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ்
இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுள்களை வணங்குதல்
**விடை: இ) மம்மியாக்கம்**

3. **சுமேரியரின் எழுத்துமுறை ..................... ஆகும்.** ※ ※ ※ [April-'23; HY & QY-'24]
அ) பிக்டோகிராபி ஆ) ஹைறோகிளிபிக்
இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம் **விடை: ஈ) க்யூனிபார்ம்**

4. **ஹரப்பா மக்கள் ..................... பற்றி அறிந்திருக்கவில்லை.** ※ ※ [HY-'23; April-'25]
அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்
**விடை: ஆ) குதிரை மற்றும் இரும்பு**

5. **சிந்துவெளி மக்கள் 'இழந்த மெழுகு செயல்முறை' முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை ..................... ஆகும்.**
அ) ஜாடி ஆ) மதகுரு அல்லது அரசன்
இ) பறவை ஈ) நடனமாடும் பெண்
**விடை: ஈ) நடனமாடும் பெண்**

6. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**
(i) **மெசபடோமியாவின் மிகப் பழமையான நாகரிகம் அக்காடியர்களுடைய நாகரிகம் ஆகும்.**
(ii) **சீனர்கள் ஹைறோகிளிபிக் முறையை வளர்த்தெடுத்தார்கள்.**
(iii) **யூப்ரடிஸ், டைகிரிஸ் ஆகிய ஆறுகள் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.**
(iv) **பாபிலோனிய அரசரான ஹமுராபி பெரும் சட்ட வல்லுநர் ஆவார்.**
அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி
இ) (iii) சரி ஈ) (iv) சரி **விடை: ஈ) (iv) சரி**



www.surabooks.com

7. **சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** ※ [QY-'23]

(i) **யாங்ட்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.**

(ii) **வு-டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்.**

(iii) **சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்.**

(iv) **தாவோயிசத்தை நிறுவியவர் மென்சியஸ் என்று சீன மரபு கூறுகிறது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **விடை: இ) (iii) சரி**

8. **பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான காலவரிசை எது?**

அ) சுமேரியர்கள் - அஸிரியர்கள் - அக்காடியர்கள் - பாபிலோனியர்கள்

ஆ) பாபிலோனியர்கள் - சுமேரியர்கள் - அஸிரியர்கள் - அக்காடியர்கள்

இ) சுமேரியர்கள் - அக்காடியர்கள் - பாபிலோனியர்கள் - அஸிரியர்கள்

ஈ) பாபிலோனியர்கள் - அஸிரியர்கள் - அக்காடியர்கள் - சுமேரியர்கள்

**விடை: இ) சுமேரியர்கள் - அக்காடியர்கள் - பாபிலோனியர்கள் - அஸிரியர்கள்**

9. **கூற்று : மெசபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.**

**காரணம் : அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.** ※ [HY-'19]

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு. ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**விடை: ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. .................... என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும். ※ [April-'24] **விடை: ஸ்பிங்க்ஸின்**

2. எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை .................... ஆகும். **விடை: ஹைரோகிளிபிக்ஸ் (சித்திர எழுத்து முறை)**

3. .................... என்பது பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களை விளக்கிக்கூறும் பண்டைய பாபிலோனியாவின் ஒரு முக்கியமான ஆவணம் ஆகும். **விடை: ஹமுராபியின் சட்டத் தொகுப்பு**

4. சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் .................... ஆவார். **விடை: லாவோட்சு**

5. ஹரப்பா நாகரிகம் நிலவிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மீதுள்ள .................... உருவங்களும் ஓவியங்களும் அவர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன. **விடை: சுடுமண்ணாலான**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) **ஹரப்பாவில் உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.**

ஆ) **க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை.**



www.surabooks.com

இ) சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்களும், செம்பில் செய்யப்பட்ட நடனமாடும் பெண் உருவமும் எகிப்தியர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.

ஈ) மெசபடோமியர்கள் சூரிய நாள்காட்டி முறையை வகுத்தார்கள்.

**விடை: ஆ) க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை.**

2. அ) அமோன் ஓர் எகிப்திய கடவுள்.

ஆ) அரண்களால் சூழ்ந்த ஹரப்பா நகரத்தில் கோயில்கள் இருந்தன.

இ) பெரிய ஸ்பிங்ஸ் என்பது பழங்கால மெசபடோமியாவில் உள்ள பிரமிடு வடிவ நினைவுச்சின்னமாகும்.

ஈ) பானை வனைவதற்கான சக்கரத்தைக் கண்டுபிடித்த பெருமை எகிப்தியர்களைச் சாரும்.

**விடை: அ) அமோன் ஓர் எகிப்திய கடவுள்.**

## IV. பொருத்துக:

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | பாரோ | - | ஒருவகைப் புல் | **எகிப்திய அரசர்** |
| 2. | பாப்பிரஸ் | - | பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம் | **ஒருவகைப் புல்** |
| 3. | பெரும் சட்ட வல்லுநர் | - | மொகஞ்சதாரோ | **ஹமுராபி** |
| 4. | கில்காமெஷ் | - | ஹமுராபி | **பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம்** |
| 5. | பெருங்குளம் | - | எகிப்திய அரசர் | **மொகஞ்சதாரோ** |

## V. சுருக்கமான விடை தருக:

**1. எகிப்தியர்கள் கலை கட்டடக்கலையில் திறன் பெற்றவர்கள் – விளக்குக.**

விடை: (i) எகிப்தியர்கள் கலை, கட்டடக்கலையில் சிறந்து விளங்கினர்.

(ii) அவர்களின் **எழுத்து சித்திர வடிவில்** இருந்தது.

(iii) பாரோக்களின் சமாதிகளான **பிரமிடுகள்** பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்கள் ஆகும்.

(iv) கிஸா பிரமிடுகள், ஸ்பிங்ஸின் பிரம்மாண்டமான சிலை போன்றவை எகிப்தியர்கள் கட்டிடக் கலையில் திறன்பெற்றவர்கள் என்பதனை வெளிப்படுத்துகின்றன.

**2. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.** ※ ※ [QY-'23 & '24]

விடை: **சிகுராட்களின் முக்கிய பண்புகள் :**

(i) பண்டைய மெசபடோமியா நகரின் மையத்தில் மேடை மீது “சிகுராட்” என்னும் கோவில் கட்டப்பட்டன. இது **“உர்”** என்ற நகரில் உள்ளது.

(ii) கோவிலைச் சுற்றி **சடங்குகள் செய்ய தாழ்வாரங்கள்**, புனித இடங்கள், ஆண் மற்றும் பெண் மதகுருமார்களின் கல்லறைகள், சடங்குகளுக்கான விருந்து அரங்குகள், தொழிற்கூடங்கள், களஞ்சியங்கள், கிடங்குகள், நிருவாகக் கட்டடங்கள் காணப்படுகின்றது.

3. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் – விவரி. ※※※ [April-'23, '24 & '25]

விடை: **ஹமுராபியின் சட்டத் தொகுப்பு.**

(i) பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களைக் கூறும் ஒரு முக்கியமான **சட்ட ஆவணம்** ஆகும்.

(ii) குடும்ப உரிமைகள், வணிகம், அடிமை முறை, வரிகள், கூலி போன்ற **282 சட்ட பிரிவுகள்** இதில் உள்ளன.

(iii) இது **"கண்ணுக்குக் கண்"**, **"பல்லுக்குப் பல்"** என்ற பழிக்குப் பழிவாங்கும் கொள்கையை அடிப்படையாக கொண்டது.

## VI. விரிவான விடையளிக்கவும்.

1. **ஹரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் – இவற்றை அவற்றின் முக்கியமான கூறுகளுடன் விளக்கு.**

விடை: அ) **ஹைரோகிளிபிக்ஸ்:**

(i) எகிப்தியர்களின் எழுத்துமுறை **ஹைரோகிளிபிக்** என்று அழைக்கப்படுகிறது.

(ii) இந்த எழுத்து வகை **நினைவுச்சின்னங்களில்** உள்ள முத்திரை மற்றும் இதர பொருள்களில் பயன்படுத்தப்பட்டது.

(iii) பொதுவான **தகவல் தொடர்புக்கு ஹெரிடிக்** எழுத்து பயன்படுத்தப்பட்டது. இது **பிக்டோகிராம்** எனப்படும் சித்திர எழுத்து வடிவமாகும்.

(iv) இது சுமார் கி.மு. (பொ.ஆ.மு) 3000-ல் உருவாக்கப்பட்டது. இந்த எழுத்தைப் பயன்படுத்தி ஏராளமான புத்தகங்களும் பிரதிகளும் எழுதப்பட்டன.

ஆ) **க்யூனிபார்ம்:**

(i) இது சுமேரிய எழுத்துமுறை ஆகும். இது **ஆப்பு வடிவில்** இருப்பதால் இப்பெயர் வழங்கப்பட்டது.

(ii) இது உலகின் பழமையான எழுத்து முறை ஆகும்.

(iii) வணிகப் பரிமாற்றங்களுக்கும், கடிதங்கள், கதைகள் எழுதுவதற்கும் இந்த எழுத்து முறையைச் சுமேரியர்கள் பயன்படுத்தினார்கள்.

(iv) இந்த எழுத்துகள் **சுட்ட களிமண்** பலகைகளில் எழுதப்பட்டது. இதன் மூலம் சுமேரிய நாகரிகம் பற்றி ஏராளமான தகவல்களை நாம் அறிந்து கொள்கிறோம்.

2. **தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு.**

விடை: **இலக்கியம்:**

(i) லாவோ ட்சு, கன்பூசியஸ், மென்சியஸ், மோ டி, தாவோ சின் போன்ற **தத்துவ ஞானிகளும், சீனக் கவிஞர்களும்** சீன நாகரிகத்திற்கு ஏராளமாகப் பங்களித்துள்ளார்கள்.

(ii) இராணுவ உத்தியாளரான சன் ட்சூ '**போர்க் கலை**' என்ற நூலை எழுதினார்.

(iii) **தி ஸ்பிரிங் அண்ட் ஆட்டோம் அனல்ஸ்** என்ற நூல் அதிகாரப்பூர்வ சீன அரசு நூலாக அங்கீகரிக்கப்பட்டது.

(iv) மஞ்சள் பேரரசின் **கேனன்ஸ் ஆஃப் மெடிசின்** என்ற நூல் சீனாவின் பழமையான மருத்துவ நூலாகக் கருதப்படுகிறது.

(v) லாவோட்சு - தாவோயிசத்தை தோற்றுவித்தார். ஆசைதான் **அத்தனை துன்பங்களுக்கும் காரணம்** என்பது இவரது கொள்கையாகும்.



www.surabooks.com

**தத்துவம் :**

(i) கன்பூசியஸ் - இவர் அரசியல் சீர்திருத்தவாதி. ஒருவரது **தனிப்பட்ட வாழ்க்கை சீர்திருத்தப்பட்டால்,** அவரது குடும்ப வாழ்க்கை முறைப்படுத்தப்படும். குடும்பம் முறைப்படுத்தப்பட்டால் தேச வாழ்வு முறைப்படுத்தப்பட்டு விடும் என்று குறிப்பிட்டார்.

(ii) மென்சியஸ் - இவர் ஒரு புகழ்பெற்ற தத்துவஞானியுமாவார். சீனா முழுவதும் பயணம் செய்து ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

3. **சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.** ※※※
[QY-'23 & '24; April-'23 & '25; HY-'24]

விடை: (i) "சிந்துவெளி நாகரிகம்" பண்டைய நாகரிகங்களில் முக்கியமான ஒன்றாகும். இது **ஹரப்பா நாகரீகம்** என்றும் அழைக்கப்படுகிறது. ஹரப்பாதான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

(ii) ஹரப்பா நகரங்களில் மதில் சுவர்கள், நன்கு திட்டமிட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன.

(iii) அவர்கள் **சுட்ட** மற்றும் **சுடாத செங்கற்களையும்** கற்களையும் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள். உள்ளாட்சி அமைப்பு ஒன்று நகரங்களில் திட்டமிடலை கட்டுப்படுத்தியிருக்கக் கூடும்.

(iv) மொகஞ்சதாரோவில் உள்ள நன்கு தளமிடப்பட்ட பல அறைகள் கொண்ட **மாபெரும் குளியல் குளம்** ஒரு முக்கியமான கட்டுமானமாகும்.

(v) தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் போல் காணப்படுகின்றன.

(vi) அவர்கள் உலோகத்தாலும் கல்லாலுமான **அணிகலன்களைப்** பயன்படுத்தினார்கள். அவர்கள் மேலும் பருத்தி மற்றும் பட்டாடைகளைப் பயன்படுத்தினார்கள். செம்பு மற்றும் தங்கத்தாலான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள்.

(vii) அவர்கள் **பெண் தெய்வத்தை** வழிபட்டார்கள். காலிபங்கனில் நெருப்புக் குண்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இறந்தவர்களைப் புதைப்பது வழக்கத்திலிருந்தது.

(viii) ஹரப்பர்களின் எழுத்துக்களுக்கான **பொருள்** கண்டுபிடிக்கப்படவில்லை என்பதால் **ஹரப்பா நாகரீகம்** பற்றி முழுமையாக அறிய முடியாமல் உள்ளது.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**I. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.**

1. **தொடக்ககால நாகரிகம் :** ※※ [QY & HY-'19]

i) **நாகரிகம் என்றால் என்ன?**

ii) **தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக.**

iii) **பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை எவை?**

iv) **நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கிய போது என்ன நடந்தது?**

விடை: (i) நாகரிகம் என்பது ஒரு முன்னேறிய, முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்று கருதப்படுகிறது.

(ii) தொடக்க கால நாகரிகங்கள் - எகிப்திய, மெசபடோமிய, சிந்துவெளி மற்றும் சீன நாகரிகம் ஆகும்.

(iii) பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை விவசாயம் மற்றும் வேட்டையாடுதல் ஆகும்.

(iv) நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கியதும் மிகப்பெரிய கட்டடங்களை எழுப்பினர். எழுத்துக் கலையை உருவாக்கினர். அறிவியலும், தொழில் நுட்பமும் சமூக மேம்பாட்டிற்குப் பங்காற்றின.

## கூடுதல் வினாக்கள்

### I. ஒரு மதிப்பெண் வினாக்கள்.

1. புதிய கற்கால வாழ்க்கை முறை தொடங்கிய போது, .................. பெரிய குழுக்களாக மக்கள் திரள ஆரம்பித்தனர். **விடை: கிராமங்களில்**
2. தலைவரின் கீழான குழுக்கள் என்பவை இனக்குழு அமைப்புகளைவிட சற்றுப் பெரிய .............. அமைப்புகள். **விடை: அரசியல்**
3. எகிப்து ................ நதியால் செழிப்படைகிறது. **விடை: நைல்**
4. எகிப்தியர், இறப்பின் கடவுளாக ............... ஐ கருதினார். **விடை: அனுபிஸ்**
5. உலகின் முதல் இராணுவ அரசு ............... ஆகும். **விடை: அஸிரிய பேரரசு**
6. புதிய கற்காலத்திற்குப்பின், ............... காலத்தில் நாகரிகங்கள் தோன்றின. **விடை: வெண்கலக்**
7. ............... என்பது ஒப்புநோக்கில் மேம்பட்ட சமூக அமைப்பு ஆகும். **விடை: நாகரிகம்**
8. எகிப்து நாகரிகம் கட்டடக் கலைக்குப் புகழ்பெற்றது ............... ஆகும். **விடை: பிரமிடுகள்**
9. நாட்காட்டி உருவாக்கம், வானியல் அறிவியல் வளர்ச்சி ஆகிய துறைகளில் ............... பங்களிப்பு செய்துள்ளது. **விடை: மெசபடோமியா நாகரிகம்**

### II. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. **அ) ஒவ்வொரு பண்பாடும் நாகரிகமும் தனக்கான தனித்த வாழ்வியல் கூறுகளை கொண்டுள்ளன.**

   **ஆ) எகிப்தியர், இறந்தவர்களின் உடல்களை சார்க்கோபேகஸ் எனப்படும் மரப்பெட்டிகளில் பாதுகாப்பார்கள்.**

   **இ) எகிப்தியரின் எழுத்துமுறை கியூனி பார்ம் என்று அழைக்கப்படுகிறது.**

   **ஈ) மஞ்சள் ஆறு சீனாவின் நன்கொடை எனப்படுகிறது.**

   **விடை: அ) ஒவ்வொரு பண்பாடும் நாகரிகமும் தனக்கான தனித்த வாழ்வியல் கூறுகளை கொண்டுள்ளன.**

### III. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | மொஹஞ்சதாரோ | - | (i) | ஹரப்பாவின் மாடுகள் |
| ஆ) | ஜெபு | - | (ii) | சீன தத்துவஞானி |
| இ) | லாவோ ட் சு | - | (iii) | ரோமானியப் பேரரசர் |
| ஈ) | கன்பூசியஸ் | - | (iv) | தாவோயிசத்தைத் தோற்றுவித்தவர் |
| உ) | மார்க்கஸ் அரேலியஸ் | - | (v) | நடனமாடும் பெண் சிலை |

**விடை அ) - v, ஆ) - i, இ) - iv, ஈ) - ii, உ) - iii**



www.surabooks.com

## IV. சுருக்கமான விடை தருக :

**1. அக்காடியர்களைப் பற்றி சிறு குறிப்பு வரைக.**

விடை: (i) **கி.மு.** (பொ.ஆ.மு.) 2450 முதல் 2250 வரை குறுகிய காலத்திற்கு அக்காடியர்கள் சுமேரியாவில் ஆதிக்கம் செலுத்தினார்கள்.

(ii) சார்கான் என்பவர் ஒரு புகழ்பெற்ற அக்காடிய அரசர். சார்கானும் **அவரது** வாரிசுகளும் 100 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்தார்கள்.

(iii) அக்காடியர்களின் கியூனிபார்ம் ஆவணங்கள் சிந்துவெளி நாகரிகத்தைக் குறிப்பிடுகின்றன.

(iv) சார்கானின் கியூனிபார்ம் ஆவணங்கள் மெலுஹா, மாகன், தில்முன் ஆகிய இடங்களிலிருந்து வந்த கப்பல்கள் அக்காடிய துறைமுகங்களில் நின்றதாகக் கூறுகின்றன.

**2. எகிப்திய நாகரிகத்தின் தன்மைகளும் பங்களிப்பும் பற்றி விளக்குக.**

விடை: **எகிப்திய நாகரிகத்தின் தன்மைகளும் பங்களிப்பும்:**

(i) எகிப்தியர்கள் **சூரியனை** அடிப்படையாகக் கொண்ட **நாட்காட்டியை** உருவாக்கினார்கள்.

(ii) பிரமிடுகளும், அவற்றின் வடிவமைப்பும் அவர்களது நிலஅளவை மற்றும் கணிதத் திறன்களை வெளிப்படுத்துகின்றன.

(iii) ஹைரோகிளிபிக்ஸ் எழுத்து முறை, அவர்களின் குறியீடுகளைப் பயன்படுத்தும் திறனைக் காட்டுகின்றன.

(iv) மம்மிகளும், இறந்த உடல்களைப் பாதுகாப்பதும் மற்றொரு முக்கியமான பங்களிப்பாகும்.

(v) அறிவியல், தொழில்நுட்பங்களில் புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**3. எகிப்திய மம்மிகள் பற்றி குறிப்பு வரைக.**

விடை: **எகிப்திய மம்மிகள்:**

(i) பதப்படுத்தப்பட்ட **இறந்த உடல் மம்மி** எனப்படும். இறந்தவர்களின் உடல்களை சோடியம் கார்பனேட், சோடியம் பைகார்பனேட் ஆகியவற்றின் கலவையான **நாட்ரன்** உப்பு என்ற ஒரு வகை உப்பை வைத்துப் பாதுகாக்கும் வழக்கம் எகிப்தியரிடையே இருந்தது.

(ii) நாற்பது நாள்களுக்குப் பிறகு, உப்பு உடலின் ஈரப்பதம் அனைத்தையும் உறிஞ்சிய பிறகு, உடலை மரத்தூளால் நிரப்பி, லினன் துண்டுகளால் சுற்றி, துணியால் மூடி வைத்துவிடுவார்கள். உடலை சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள்.

**4. சிந்து சமவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு காரணங்கள் யாவை?**

விடை: **சிந்து சமவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி:**

(i) சுமார் கி.மு. (பொ.ஆ.மு.) 1900லிருந்து சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி பெறத் தொடங்கியது.

(ii) பருவநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி, நதியின் வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு, அந்நியர் படையெடுப்பு ஆகியவை இந்த நாகரிகம் வீழ்ச்சி பெறவும், மக்கள் தெற்கு மற்றும் கிழக்கு திசை நோக்கி இடம் பெயரவும் சில முக்கியமான காரணங்களாக அமைந்தன எனக் கருதப்படுகிறது.



www.surabooks.com

www.surabooks.com



5. **மெசபடோமிய நாகரிகத்தின் பங்களிப்பு குறித்து விளக்குக.**

**விடை: மெசபடோமிய நாகரிகத்தின் பங்களிப்பு:**

(i) சுமேரியர்கள் தான் குயவர்களின் **சக்கரத்தை** முதலில் கண்டுபிடித்தார்கள்.

(ii) 360 நாள்கள் கொண்ட நாள்காட்டியைத் தயாரித்தார்கள். ஒரு வட்டத்தை 360 பாகைகளாகப் பிரித்தார்கள்.

(iii) **கியூனிபார்ம்** எழுத்துமுறை அவர்களது பங்களிப்புதான்.

(iv) **ஹமுராபியின் சட்டத் தொகுப்பு** மெசபடோமியர்களின் மற்றொரு சாதனை.

## V. விரிவான விடையளிக்கவும்.

1. **மெசபடோமியர்களின் கலை, அறிவியல் குறித்து விவரி.**

**விடை: கலை:**

(i) மெசபடோமியக் கலையில் கல் மற்றும் களிமண்ணில் செய்த சிற்பங்களும் அடங்கும். சில ஓவியங்களும், வண்ணம் தீட்டப்பட்ட சிற்பங்களும் இன்றும் காணப்படுகின்றன.

(ii) **ஆடுகள், கிடாக்கள், காளைகள், சிங்கங்கள்** போன்ற விலங்குகளைச் சிற்பமாக வடித்துள்ளார்கள்.

(iii) **மனிதத் தலை** கொண்ட **சிங்கம், காளை** போன்ற புராண வடிவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

(iv) அஸிரிய, பாபிலோனியப் பேரரசுகளின் காலங்களில் மிக பிரம்மாண்டமான சிலைகள் உருவாக்கப்பட்டன.

**அறிவியல்:**

(i) மெசபடோமியர்கள் **கணிதம், வானவியல், மருத்துவம்** ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்கள்.

(ii) **பெருக்கல், வகுத்தல், மும்மடிச் சமன்பாடு** ஆகிய கருத்துகளையும் அவர்கள் உருவாக்கினார்கள்.

(iii) அவர்கள் 60ஐ அடிப்படையாகக் கொண்ட ஒரு எண் முறையைக் கண்டுபிடித்தார்கள். அதன் மூலமாகத்தான் நமக்கு 60 நிமிடங்கள் கொண்ட ஒரு மணி நேரம், 24 மணிநேரம் கொண்ட ஒரு நாள், 360 பாகைகள் கொண்ட வட்டம் ஆகியவை கிடைத்தன.

(iv) அவர்கள் நீர்க் கடிகாரத்தையும், சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டியையும் உருவாக்கினார்கள்.

(v) அவர்கள் பரப்பளவு, திடப்பொருள்கள் ஆகியவற்றை அளவிடுவதற்கான முறைகளைக் கண்டுபிடித்தார்கள். மேம்பட்ட எடை மற்றும் அளவை முறைகளைப் பயன்படுத்தினார்கள்.

(vi) அவர்களது கருத்துகள் கிரேக்க வானவியல் மீது தாக்கம் செலுத்தின. அவர்கள் மருத்துவ முறையையும் உருவாக்கினார்கள்.

(vii) கி.மு (பொ.ஆ.மு.) 11ம் நூற்றாண்டில் நோய் அறிதலுக்கான ஒரு கையேட்டையும் உருவாக்கினார்கள். இது நோய்களுக்கான அறிகுறிகளையும், அவற்றிற்கான மருந்துகளையும் பட்டியலிடுகிறது.

(viii) இது மூலிகைகள், தாதுக்கள் பற்றிய அவர்களது அறிவியல் அறிவை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

✶ ✶ ✶

www.surabooks.com



# அலகுத் தேர்வு

காலம் : 40 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** (4 × 1 = 4)

**1. சுமேரியர்களின் எழுத்துமுறை .................... ஆகும்.**

அ) பிக்டோகிராபி ஆ) ஹைறோகிளிபிக்

இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்

**2. ஹரப்பா மக்கள் .................... பற்றி அறிந்திருக்கவில்லை.**

அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு

இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்

**3. i) யாங்ட்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.**

**ii) வு-டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்.**

**iii) சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்.**

**iv) தாவோயிசத்தை நிறுவியவர் மீனியஸ் என்று சீன மரபு கூறுகிறது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி

**4. எகிப்தியர், இறப்பின் கடவுளாக ........................ ஐ கருதினார்.**

அ) அமோன் ஆ) அனுபிஸ் இ) ஹோரஸ் ஈ) சேத்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** (4 × 1 = 4)

1. சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் .................... ஆவார்.
2. .................... என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
3. எகிப்து நாகரிகம் கட்டடக் கலைக்குப் புகழ்பெற்றது ........................ ஆகும்.
4. எகிப்து ........................ நதியால் செழிப்படைகிறது.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | பாப்பிரஸ் | அ) | ஹரப்பாவின் மாடுகள் |
| 2. | பெருங்குளம் | ஆ) | தாவோயிசத்தைத் தோற்றுவித்தவர் |
| 3. | ஜெபு | இ) | மொகஞ்சதாரோ |
| 4. | லாவோ ட் சு | ஈ) | ஒருவகைப் புல் |

**IV. சுருக்கமாக விடையளி.** (4 × 2 = 8)

1. அக்காடியர்களைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
2. சிகுராட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
3. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் - விவரி.
4. மெசபடோமிய நாகரிகத்தின் பங்களிப்பு குறித்து விளக்குக.

**V. விரிவான விடையளி,** (1 × 5 = 5)

1. தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு.

✶ ✶ ✶

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

அலகு 3

# தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. **சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?** ※ [HY-'23]

அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ்-பிராமி ஈ) கிரந்தம்

**விடை: இ) தமிழ்-பிராமி**

2. **தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற வியாபாரிகளையும், குதிரை வணிகர்களையும் பற்றிக் குறிப்பிடுகின்ற, இலங்கையின் பாலி மொழி வரலாற்று நூல் எது?**

அ) தீபவம்சம் ஆ) அர்த்தசாஸ்திரம்

இ) மகாவம்சம் ஈ) இண்டிகா **விடை: இ) மகாவம்சம்**

3. **காடாக இருந்த இடங்களை வேளாண் நிலங்களாக மாற்றுதல், நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பெருமைகளுக்கு உரிய சோழ அரசன் யார்?**

※ ※ ※ [QY-'23 & '24; April-'25]

அ) கரிகாலன் ஆ) முதலாம் இராஜராஜன்

இ) குலோத்துங்கன் ஈ) முதலாம் இராஜேந்திரன்

**விடை: அ) கரிகாலன்**

4. **சேரர்களை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?** ※ [QY-'19]

அ) புகளூர் ஆ) கிர்நார்

இ) புலிமான்கோம்பை ஈ) மதுரை **விடை: அ) புகளூர்**

5. (i) **பொருள் பரிமாற்றத்துக்கான ஊடகமாக நாணயங்கள் இடைக்கற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.**

(ii) **மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த சாதாரண மக்கள் பிராகிருத மொழி பேசினார்கள்.**

(iii) **ரோமானிய ஆவணமான வியன்னா பாப்பிரஸ், முசிறி உடனான வணிகத்தைக் குறிப்பிடுகிறது.**

(iv) **தமிழ் இலக்கண நூலான பத்துப்பாட்டில் திணைக்குறித்த கருத்து இடம் பெற்றுள்ளது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **விடை: ஆ) (ii) சரி**



www.surabooks.com

**6. (i) பதிற்றுப்பத்து பாண்டிய அரசர்களையும் அவர்களின் ஆட்சிப் பகுதிகளையும் குறித்துச் சொல்கிறது.**

**(ii) காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிக நடவடிக்கைகளை அகநானூறு விவரிக்கிறது.**

**(iii) சோழர்களின் சின்னம் புலி ஆகும்; அவர்கள் புலி உருவம் பொறித்த, சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்.**

**(iv) நெய்தல் என்பது மணற்பாங்கான பாலைவனப் பகுதி ஆகும்.**

அ) (i) சரி ஆ) (ii) மற்றும் (iii) சரி

இ) (iii) சரி ஈ) (iv) சரி **விடை: இ) (iii) சரி**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ...................... ஆகும். **விடை: கல்வெட்டியல்** ※ [HY-'19]

2. கடந்தகாலச் சமூகங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான சான்றுகளாக உள்ள சில பொருள்களை மீட்டெடுப்பதற்கு ஓரிடத்தை முறைப்படி தோண்டுதல் .................. ஆகும். **விடை: தொல்லியல் அகழாய்வு**

3. மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் ...................... ஆகும். ※ [QY-'23] **விடை: அர்த்தசாஸ்திரம்**

4. ...................... என்பது பிரிவு அல்லது வகை என்ற பொருளில் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்ட கருப்பொருள்; மேலும், இது ஒரு வாழ்விடத்தை அதன் தனித்தன்மை வாய்ந்த இயற்கைக்கூறுகளுடன் குறிப்பதாகவும் உள்ளது. **விடை: திணை**

5. கிரேக்கர்கள், ரோமானியர்கள், மேற்கு ஆசியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மேற்கத்தியர்களை ...................... என்னும் சொல் குறிக்கிறது. **விடை: யவனர்**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. அ) இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.**

**ஆ) எரித்ரியன் கடலின் பெரிப்ளூஸ் இந்தியா உடனான மிளகு வணிகம் குறித்துக் கூறுகிறது.**

**இ) இந்தியாவில் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களில் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன; நாணயங்கள் பெரும்பாலும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன.**

**ஈ) சங்க காலம் வெண்கலக் காலத்தில் வேரூன்றத் தொடங்கியது.**

**விடை: அ) இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.**

**2. அ) சேரர்கள் காவிரிப்பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும்.**

**ஆ) மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகள் அரசன் கரிகாலனைக் குறிப்பிடுகின்றன.**

இ) தமிழ்–பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.

ஈ) உப்பு விற்றவர்கள் வணிகர்கள் என்று அழைக்கப்பட்டனர்; அவர்கள் வணிகத்துக்காக மாட்டு வண்டியில் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்தார்கள்.

**விடை: இ) தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.**

## IV. பொருத்துக.

| | ※ [QY-'19] | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | கல்வெட்டியல் | - | முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு | **கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது** |
| 2. | காலவரிசைக் குறிப்புகள் | - | சங்க காலத் துறைமுகம் | **முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு** |
| 3. | மேய்ச்சல் வாழ்க்கை | - | விலையுயர்ந்த கல்லில் செய்யப்பட்ட ஆபரணம் | **கால்நடைகளை வளர்த்துப் பிழைக்கும் நாடோடி மக்கள்** |
| 4. | புடைப்பு மணிகள் (Cameo) | - | கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது | **விலையுயர்ந்த கல்லில் செய்யப்பட்ட ஆபரணம்** |
| 5. | அரிக்கமேடு | - | கால்நடைகளை வளர்த்துப் பிழைக்கும் நாடோடி மக்கள் | **சங்க காலத் துறைமுகம்** |

## V. சுருக்கமான விடை தருக.

**1. தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்த கால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன – உன் கருத்துகளை முன்வைக்கவும்.** ※※ [QY & HY-'19]

**விடை:** (i) தொல்லியல் அகழாய்வுப் பணி என்பது பண்டைக்கால சமூகத்தின் வாழ்க்கை முறையை அறிந்துகொள்ளும் நோக்கில் முறைப்படி ஓர் இடத்தை அகழ்ந்து, சான்றுகளாகக் கிடைக்கும் பொருள்களை முறையாக **திரட்டி ஆராய்வதாகும்.**

(ii) அகழாய்வு செய்த இடங்கள் - அரிக்கமேடு, அழகன்குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவ சமுத்திரம் மற்றும் கேரளாவின் பட்டிணம்.

(iii) **அரிக்கமேட்டில்** அகழாய்வு நடந்தபோது சரக்குக்கிடங்கு, தொட்டிகள், உறை கிணறுகள், தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரம் இருந்தது என்பதனை அகழாய்வின் மூலம் அறிய முடிகிறது.

**2. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?**

**விடை:** (i) சேர, சோழ, பாண்டிய அரசர்களின் நாணயங்கள், **முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்கள்,** ரோமானிய நாணயங்கள் ஆகியவை சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள உதவும் சான்றாகும்.

(ii) கொடுமணல், போடிநாயக்கனூர் ஆகிய ஊர்களில் முத்திரை பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன.

(iii) ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூர், அழகன் குளம், கரூர், மதுரை ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

(iv) மதிப்புயர் செல்வமாகவும் நாணயங்கள் பாதுகாக்கப்பட்டன.



www.surabooks.com

**3. சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.** ※ [QY-'23]

விடை: (i) சங்க கால மக்கள் **வேளாண்மையையே** முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர்.

(ii) நெல், கரும்பு, சிறுதானியங்கள் பயிரிடப்பட்டன. நன்செய், புன்செய் நிலங்களிலும் **பயிர்த்தொழில்** நடைபெற்றது.

(iii) செந்நெல், வெண்நெல், ஐவனநெல் எனப் **பலவகையான நெல்கள்** குறித்து இலக்கியங்களில் குறிப்பிடுகின்றன.

(iv) ஆதிச்சநல்லூரில், பொருந்தல் என்ற இடத்திலும் மேற்கண்ட அகழாய்வில் **தாழிகளுடன் நெல்லும்** கிடைத்துள்ளது.

**4. அயல் நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தது – இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.**

விடை: (i) கிழக்கிலும் மேற்கிலும் பலவெளிநாடுகளுடன் தமிழர்கள் **வணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.**

(ii) ரோமானியக் கப்பல்கள் பருவக்காற்று வீசும் சமயத்தில் மேலைக்கடலான அரபிக்கடலைக் கடந்து **தமிழகக் கடற்கரைகளுக்கு வந்தன.**

(iii) மிளகு போன்ற **நறுமணப்பொருள்களும், யானைத்தந்தம், நவமணிகள்** உள்ளிட்ட அரிய பொருள்களும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின.

(iv) தங்கம், வெள்ளி, செம்பு உள்ளிட்ட உலோகங்களும் **இறக்குமதி செய்யப்பட்டன.**

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்க கால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின?**

விடை: (i) சங்க காலத்திற்கான அடித்தளம் **இரும்புக் காலத்தில்** வேர் கொண்டது. அக்காலத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர்.

(ii) தலைவர்கள் தங்கள் நிலப்பகுதியை தமது ஆளுமையின் கீழ் கொண்டுவந்தனர். இவர்களிடமிருந்தே **வேந்தர்கள் தோன்றினர்.**

**சேரர்கள்:**

(i) தற்காலத்துக் கேரளா மற்றும் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியை சேரர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்களது **தலைநகரம் - வஞ்சி, துறைமுகம் - முசறி, தொண்டி, மாலை - பனம்பூ, இலச்சினை - வில் அம்பு.**

(ii) சங்க இலக்கியமான **பதிற்றுப்பத்து** சேர அரசர்கள் குறித்துக் கூறுகிறது.

**சோழர்கள்:**

(i) காவிரி வடிநிலப் பகுதியையும் தமிழ்நாட்டின் வடபகுதியையும் சோழர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

(ii) அவர்களின் **தலைநகரம் - உறையூர், துறைமுகம் - காவிரிப்பூம்பட்டினம், இலச்சினை - புலி.**

(iii) சோழ மன்னர்களில் தலைசிறந்தவர் **கரிகால் சோழன்.** இவர் காவிரி ஆற்றின் நீரை பாசனத்துக்கு பயன்படுத்தி விவசாயம் செழிக்கச் செய்தார்.

**பாண்டியர்கள்:**

(i) இவர்களின் **தலைநகரம் - மதுரை.** தமிழகத்தின் தென்பகுதியை ஆட்சி செய்தனர். **துறைமுகம் - கொற்கை, இலச்சினை - மீன்** ஆகும்.

(ii) தமிழ்ச் சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்று தமிழ் இலக்கியங்கள் பாண்டியர்களை போற்றுகின்றன.



www.surabooks.com

**வேளிர் / குடித்தலைமை:**

(i) தமிழகத்தை ஆட்சிபுரிந்த மூவேந்தர்களைத் தவிர பல **குறுநில மன்னர்களும்** சிறிய பகுதிகளில் குடித்தலைமை ஏற்றிருந்தனர்.

(ii) குறுநில மன்னர்கள் **வேளிர்** என்றும் அழைக்கப்பட்டனர்.

(iii) **பாரி, காரி, ஓரி, நள்ளி, பேகன், ஆய், அதியமான்** போன்ற **கடையேழு** வள்ளல்களும் வாழ்ந்தனர்.

---

**2. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?** ※※※※ [April-'25]

[QY-'23 & '24; HY-'23]

விடை: **சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும்:**

**கைவினைக் கலைகள்:**

(i) கைவினைத் தயாரிப்புகளும், மிக நுண்ணிய வேலைப்பாடுடைய தொல்பொருள்களும் அதை தயாரிக்கும் **நிபுணத்துவம் பெற்ற தொழிலாளர்கள்** இருந்தனர்.

(ii) பொருள் உற்பத்தி செய்யும் அமைப்புகள் தொழிற்கூடங்கள் ஆகும்.

**மட்கலங்கள் செய்தல்:**

(i) "**கலம் செய்கோ**" என்பவர்களால் மக்களின் அன்றாட வாழ்வுக்கு தேவையான **மட்கலங்களை செய்தனர்.**

(ii) கரிய நிறத்தவை, செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டன. **கருப்பு - சிவப்பு** நிறத்தவை என்று பலவிதமான **மட்கலங்கள்** தயாரிக்கப்பட்டன.

**இரும்பு உருக்குத் தொழில்:**

(i) **இரும்பை உருக்கும் உலைகள், கொல்லுலைகள்** ஆகியன இருந்த தடயங்கள் அகழாய்வு மேற்கொண்டபோது கண்டுபிடிக்கப்பட்டது.

(ii) இரும்பைக் கொண்டு கருவிகள் செய்வதும் முக்கியமான தொழிலாக இருந்தது. **உழுகருவிகளும், வாள், ஈட்டி, கத்தி** போன்றவையும் தயாரிக்கப்பட்டன.

**கல்லில் செய்த அணிகலன்கள்:**

(i) சங்க காலத்து மக்கள் பலவிதமான அணிகலன்களை அணிந்தனர். ஏழைகள் **பூ, தழை, இழை, சுட்டகளிமண், உலோகத்தால் அணிகலன்** செய்து அணிந்தனர்.

(ii) செல்வந்தர்கள் **செம்பு, தங்கம், வெள்ளி** போன்றவற்றால் **அணிகலன்** செய்து அணிந்தனர்.

**தங்க ஆபரணங்கள்: கேரளத்தின்** பட்டணத்தில் **பொன்னை உருக்கும் உலைகள்** இருந்ததற்கான **சான்றுகள்** கிடைத்துள்ளன.

**கண்ணாடி மணிகள்:**

(i) சிலிக்கா மற்றும் பிற பொருள்களை உலையிலிட்டு உருக்கி **சிறுசிறு மணிகளாக** செய்தனர்.

(ii) **கண்ணாடி மணிகள்** பல்வேறு வண்ணங்களில் இருந்தது.

**முத்துக் குளித்தலும் சங்கு வளையல்களும்: சங்குகளை** அரிந்து **வளையல்** செய்யும் தொழிலும் சங்ககாலத்தில் இருந்தது. பெண்கள் சங்கு வளையல்கள் அணிந்திருந்தது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**துணி நெசவு:**

(i) துணி நெசவு இன்னொரு முக்கியத் தொழிலாகும். நூல் நூற்கும் கதிர்களும் துண்டுத் துணிகளும் **கொடுமணலில்** கிடைத்திருக்கின்றன.

(ii) **கலிங்கம்** மற்றும் பிற வகைத் துணி வகைகள் குறித்து இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன.

## அரசு தேர்வு வினா - விடைகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க:

1. **சங்ககாலத் துறைமுகப் பட்டினம்.** ※ [April-'24]

அ) சென்னை ஆ) மதுரை இ) அரிக்கமேடு ஈ) காஞ்சி

**விடை: இ) அரிக்கமேடு**

2. **காலக்கோடு :**

1. **கீழ்க்கண்ட ஆண்டுகளுக்கு நிகழ்ச்சிகளை எழுதிடுக.** ※ ※ [QY & HY-'19]

i) **ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு) 1300 – கி.மு (பொ.ஆ.மு) 300 வரை**

ii) **ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு) 400 – கி.மு. (பொ.ஆ.மு) 300 வரை**

iii) **பொ. ஆ. முதல் நூற்றாண்டு**

iv) **பொ. ஆ. இரண்டாம் நூற்றாண்டு**

v) **ஏறத்தாழ பொ. ஆ. 300 – பொ.ஆ. 500 வரை**

**விடை:** (i) இரும்புக்காலம் / பெருங்கற்காலம். (ii) சங்ககாலம்.

(iii) பிளினியின் இயற்கை வரலாறு. (iv) வியன்னா பாப்பிரஸ்.

(v) சங்கம் மருவியகாலம்

2. **நடு கற்கள்.** ※ ※ [QY & HY-'19]

i) **மேய்ச்சல் சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான நடைமுறை என்ன?**

ii) **பகைவர்களின் கால்நடைச் செல்வத்தைக் கவர்ந்தவர்கள் யார்?**

iii) **இறந்த வீரர்களை மக்கள் எவ்வாறு நினைவு கூர்ந்தனர்?**

iv) **நடுகற்களை நிறுவுவதற்கான வழிமுறைகளை விளக்கும் தமிழ் நூல் எது?**

**விடை:** (i) அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கி கொள்வதே பொதுவான நடைமுறை ஆகும்.

(ii) முல்லை நில மக்கள் மற்றும் தலைவன்.

(iii) இறந்த வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர்.

(iv) தொல்காப்பியம்.

## கூடுதல் வினாக்கள்

### I. ஒரு மதிப்பெண் வினாக்கள்.

1. காப்பியம் என்பவை கவிதை நயமுடைய ................வடிவிலான நீண்ட இலக்கியப் படைப்புகள். **விடை: செய்யுள்**

2. இந்தியாவுடன் நடைபெற்ற ................ வணிகத்தினால் ரோமானிய நாட்டுச் செல்வம் கரைந்தது குறித்து பிளினி ஆதங்கப்பட்டார். **விடை: மிளகு**

3. காடும், காடு சார்ந்த பகுதிகளும் ................ எனப்படும். **விடை: முல்லை**

4. கண்ணகிக்குக் கோயில் எழுப்பிய மன்னன் ................ . **விடை: சேரன் செங்குட்டுவன்**

5. ................ விற்ற வணிகர்கள் உமணர்கள் என்று அழைக்கப்பட்டனர். **விடை: உப்பு**

6. .............. வழியாக இலக்கியங்கள் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டன.
**விடை: தமிழ்ச்சங்கம்**

7. ............... விவரித்துள்ள திணை முறை தமிழகத்திற்கே உரிய வாழ்வுமுறையாகும்.
**விடை: தொல்காப்பியம்**

8. தமிழகத்தில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட மொழியின் வரிவடிவத்திற்கு .............. என்று பெயர்.
**விடை: தமிழ் பிராமி**

9. செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே .................. கடல் ஆகும். **விடை: எரித்திரியன்**

10. ................ என்போர் சங்க காலத்தின் குறுநிலமன்னர்கள் ஆவர். **விடை: வேளிர்**

## II. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. **அ) சமணத்துறவிகள் பெரும்பாலும் குகைகளை தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர்.**
**ஆ) நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து பரிபாடல் விரிவாக எடுத்துரைக்கிறது.**
**இ) பாசனநீர் மேலாண்மைக்கு கரிகால் சோழன் ஆட்சியில்தான் வித்திடப்பட்டது.**
**ஈ) முல்லைத் திணைக்கு உரிய வழிபாட்டுக் கடவுள் முருகன்.**
**விடை: அ) மற்றும் இ சரி**

## III. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| அ) | சமணத் துறவிகள் | i) | பனம் பூ மாலை |
| ஆ) | பெரிப்ளஸ் | ii) | கீழடி |
| இ) | சேரர்கள் | iii) | கடல் வழிகாட்டி |
| ஈ) | சிலப்பதிகாரம் | iv) | குகை வாழிடங்கள் |
| உ) | சிலைமான் | v) | இளங்கோவடிகள் |

**அ) - iv, ஆ) - iii, இ) - i, ஈ) -v, உ) - ii**

## IV. சுருக்கமான விடை தருக:

1. **வெறியாட்டம் என்றால் என்ன?**

**விடை:** சங்க காலத்தில் பலவகையான கலைகளும் செழித்திருந்தன. சமய சடங்குகளின் போது நிகழ்த்தப்படும் ஆட்டங்களில் ஒரு வகைக்கு வெறியாட்டம் என்று பெயர்.

2. **நடுகற்கள் – சிறு குறிப்பு வரைக.**

**விடை:** (i) போர்க்களத்திலும் **ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம்** அடைந்தவர்களின் நினைவாக **நடுகற்கள்** நடப்பட்டன.

(ii) எதிர்த்துப் போராடி இறந்துவிடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர்.

(iii) போர்க்களக் காட்சிகளையும், நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.surabooks.com

**3. பிளினியின் இயற்கை வரலாறு பற்றி விவரி.**

**விடை: பிளினியின் 'இயற்கை வரலாறு'**

(i) ரோமானியரான மூத்த பிளினி '**இயற்கை வரலாறு**' என்ற நூலை எழுதினார். லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இந்நூல், ரோமானியப் பேரரசின் இயற்கை வளங்கள் குறித்து விவரிக்கிறது.

(ii) இந்தியாவுடன் நடைபெற்ற **மிளகு வணிகம்** குறித்தும் குறிப்பிடுகிறார்.

(iii) கேரளக் கடற்கரையில் இருந்த பக்காரே துறைமுகத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பாண்டிய மன்னர்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

(iv) இந்தியாவுடன் நடைபெற்ற **மிளகு வணிகத்தினால் ரோமானிய நாட்டுச் செல்வம் கரைந்தது** குறித்துப் பிளினி ஆதங்கப்படுகிறார்.

(v) இதன் மூலம் மிளகுக்கு இருந்த மதிப்பையும், பெருமளவிற்கு மிளகு தமிழகத்தில் இருந்து ஏற்றுமதியானதையும் அறியமுடிகிறது.

**4. வியன்னா பாப்பிரஸ் என்பது என்ன?**

**விடை: வியன்னா பாப்பிரஸ்**

(i) வியன்னா பாப்பிரஸ் என்பது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த **கிரேக்க ஆவணமாகும்**.

(ii) இந்த ஆவணம் ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில், ஆஸ்திரிய தேசிய நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள **பாப்பிரஸ்** அருங்காட்சியகத்தில் உள்ளது.

(iii) இது வணிகர்களுக்கு இடையேயான **எழுத்துப்பூர்வமான ஓர் உடன்படிக்கை** ஆகும்.

## V. விரிவான விடையளிக்கவும்.

**1. சங்க கால திணை என்பதன் நில அமைப்பையும், வாழ்வியல் முறைகளையும் விளக்குக.**

**விடை: திணை:**

(i) தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் திணை என்ற கருத்து விவரிக்கப்பட்டுள்ளது. திணை என்பது குறிப்பிட்ட **இயற்கை நிலவமைப்பையும்**, அதன் **வாழ்வியல் முறைகளையும்** குறிப்பதாகும்.

(ii) சங்கச் செய்யுள்கள் திணை அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டுள்ளன.

(iii) சங்க காலச் செய்யுள்களை பொருண்மை அடிப்படையில் பொதுவாக **அகத்திணைப் பாடல்கள்** என்றும் **புறத்திணைப் பாடல்கள்** என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(iv) அகத்திணை என்பது **காதல் வாழ்வையும் குடும்ப வாழ்வையும்** குறிக்கும். புறத்திணை என்பது வாழ்வின் பிற அம்சங்களையும் குறிப்பாக **போர், வீரம்** முதலிய பொருள்களைப் பேசுகிறது.

**ஐந்திணை:**

(i) ஐந்திணை என்பது தமிழ்நாட்டின் ஐந்து வகையான நிலப்பகுதிகளைக் குறிக்கும்.

(ii) ஒவ்வொரு திணைக்கும் தனியே கடவுள், தொழில், மக்கள், பண்பாடு போன்றவை உண்டு.

**ஐவகை நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகும்.**

(i) மலையும் மலைச் சார்ந்த பகுதிகளும் குறிஞ்சி

(ii) காடும் காடு சார்ந்த பகுதிகளும் முல்லை

(iii) வயலும் வயல் சார்ந்த பகுதிகளும் மருதம்

(iv) கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல்

(v) வறண்ட நிலப்பகுதி பாலை.

✶ ✶ ✶



www.surabooks.com

# அலகுத் தேர்வு

**காலம் : 40 நிமிடங்கள்** **மதிப்பெண்கள்: 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** **(4 × 1 = 4)**

**1. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?**

அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ்-பிராமி ஈ) கிரந்தம்

**2. சங்ககாலத் துறைமுகப் பட்டினம்.**

அ) சென்னை ஆ) மதுரை இ) அரிக்கமேடு ஈ) காஞ்சி

**3. i) பொருள் பரிமாற்றத்துக்கான ஊடகமாக நாணயங்கள் சங்க காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.**

**ii) மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த சாதாரண மக்கள் பிராகிருத மொழி பேசினார்கள்.**

**iii) ரோமானிய ஆவணமான வியன்னா பாப்பிரெஸ் முசிறி உடனான வணிகத்தைக் குறிப்பிடுகிறது.**

**iv) தமிழ் இலக்கண நூலான பத்துப்பாட்டில் திணை குறித்த கருத்து இடம் பெற்றுள்ளது.**

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி

**4. காடும், காடு சார்ந்த பகுதிகளும் .................... எனப்படும்.**

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **(4 × 1 = 4)**

1. கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் .................... ஆகும்.
2. மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் .................... ஆகும்.
3. செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே ........................ கடல் ஆகும்.
4. ........................ என்போர் சங்க காலத்தின் குறுநிலமன்னர்கள் ஆவர்.

**III. பொருத்துக.** **(4 × 1 = 4)**

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்வெட்டியல் | அ) | கடல் வழிகாட்டி |
| 2. | அரிக்கமேடு | ஆ) | கீழடி |
| 3. | பெரிப்ளஸ் | இ) | சங்காலத் துறைமுகம் |
| 4. | சிலைமான் | ஈ) | கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது |

**IV. சுருக்கமான விடையளி.** **(4 × 2 = 8)**

1. சங்க காலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறு.
2. நடுகற்கள் - குறிப்பு வரைக.
3. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?
4. வியன்னா பாப்பிரஸ் என்பது என்ன?

**V. விரிவான விடையளி.** **(1 × 5 = 5)**

1. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?

✶ ✶ ✶

www.surabooks.com

அலகு 4

# அறிவு மலர்ச்சியும், சமூக-அரசியல் மாற்றங்களும்

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. **ஒரு தத்துவப் பிரிவை நிறுவிய ...................... எளிமைக்கும் தன்னல மறுப்பிற்கும் உதாரணமாக விளங்கினார்.**

அ) புத்தர் ஆ) லாவோட்சே இ) கன்.்.பூசியஸ் ஈ) ஜொராஸ்டர்

**விடை: அ) புத்தர்**

2. **மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் ...................... .**

அ) தனநந்தர் ஆ) சந்திரகுப்தர் இ) பிம்பிசாரர் ஈ) சிசுநாகர்

**விடை: இ) பிம்பிசாரர்**

3. **வடக்கில் காபூல் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கில் கோதாவரி வரை பரவியிருந்த வட இந்தியாவின் ................. எனப்பட்ட பதினாறு மா நிலங்களின் அரசுகளின் எழுச்சி ஏற்பட்டது.**

அ) மஹாஜனபதங்கள் ஆ) கனசங்கங்கள்

இ) திராவிடம் ஈ) தட்சிணபதா

**விடை: அ) மஹாஜனபதங்கள்**

4. **மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் .............. .** ※ ※ [QY-'19 & '23]

அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்.்.பூசியஸ்

**விடை: ஆ) மகாவீரர்**

5. **மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தனது குறிப்புகளால் அளித்தவர்.** ※ ※ [QY-'23 & '24]

அ) மார்க்கோ போலோ ஆ) ்.பாஹியான்

இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ்

**விடை: இ) மெகஸ்தனிஸ்**

6. (i) **மகத அரசர்களின் கீழ் இருந்த மகாமாத்ரேயர்கள் அமைச்சர்களுக்குச் செயலாளர்களாகச் செயல்பட்டார்கள்.**

(ii) **மெகஸ்தனிஸ் எழுதிய 'இண்டிகா' என்னும் வரலாற்றுக் குறிப்பு மௌரியர்களின் ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த ஆவணமாக விளங்குகிறது.**

(iii) **ஒரு பேரரசைக் கட்டமைக்க நந்தர் செய்த முயற்சியை, மௌரிய அரசை உருவாக்கிய அசோகர் தடுத்து நிறுத்தினார்.**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

www.surabooks.com



(iv) மரபுகளின்படி, சந்திரகுப்தர் அவரது வாழ்வின் இறுதியில் புத்த சமயத்தின் தீவிரமான ஆதரவாளராக இருந்தார்.

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (iii) மற்றும் (iv) சரி **விடை: ஆ) (ii) சரி**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த, பிரார்த்தனைகளும் மரபுவழிக் கதைகளும் அடங்கிய புனித இலக்கியத் தொகுப்பு ..................... ஆகும். **விடை: ஜென்ட் அவெஸ்தா**
2. கங்கைச் சமவெளியில் ..................... வேளாண்மைக்கு மாடுகளின் தேவை அவசியமானது. ※ [QY-'19] **விடை: இரும்புக் கலப்பை**
3. ..................... தீர்த்தங்கரர்களின் நீண்ட மரபில் வந்தவர் என்றும் 24வது மற்றும் கடைசி தீர்த்தங்கரர் என்றும் சமணர்கள் நம்புகிறார்கள். **விடை: வர்த்தமான மகாவீரர்**
4. புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மஹாபோதி கோயில் இன்றும் ............. இல் உள்ளது. ※ ※ [QY-'23 & '24] **விடை: பீஹாரில் உள்ள புத்த கயா**
5. மௌரியப் பேரரசைப் பற்றியும் குறிப்பாக அசோகரின் தர்மம் சார்ந்த ஆட்சியைப் பற்றியும் அறிந்து கொள்ள ................... பாறைக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன. **விடை: அசோகரின் 14**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க:

1. அ) வெண்கலக் கருவிகளின் வரவால் கங்கை ஆற்றங்கரையில் இருந்த அடர்த்தியான காடுகளை அகற்றுவது எளிதானது.

ஆ) ஆசிவிகம் மேற்கு இந்தியாவில் சிறு அளவில் பரவியிருந்தது.

இ) குறிப்பிட்ட இனக்குழுக்கள் ஆதிக்கம் செலுத்திய நிலத்தொகுதிகள் மௌரியர்களுக்கு முற்பட்ட அரசுகள் எனப்பட்டன.

ஈ) இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அரசுகளில் காசி, கோசலம், மகதம் ஆகியவை வலிமை படைத்தவையாக இருந்தன.

**விடை: (ஈ) இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அரசுகளில் காசி, கோசலம், மகதம் ஆகியவை வலிமை படைத்தவையாக இருந்தன.**

2. அ) மகதத்தின் முதல் முக்கியமான அரசன் அஜாதசத்ரு.

ஆ) நிருவாகத்துக்கான ஒரு விரிவான கட்டமைப்பை உருவாக்குவதில் பிம்பிசாரர் வெற்றிகரமாகச் செயல்பட்டார்.

இ) வட இந்தியாவில் ஆட்சி செய்த சத்ரியர் அல்லாத அரச வம்சங்களில் முதலாமவர்கள் மௌரியர்களாகும்.

ஈ) ஒரு பேரரசுக்கான கட்டமைப்பை உருவாக்க நந்தர் மேற்கொண்ட முயற்சியை அசோகர் தடுத்து நிறுத்தினார்.

**விடை: ஆ) நிருவாகத்துக்கான ஒரு விரிவான கட்டமைப்பை உருவாக்குவதில் பிம்பிசாரர் வெற்றிகரமாகச் செயல்பட்டார்.**

www.surabooks.com